பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 116

சனிக்கிழமை
22 மார்ச் 2025

பங்குனி 08 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## மேதினத்தில் பரப்புரைகள் உச்சமாகும்!

கொழும்பு, மார்ச் 22
எதிர்வரும் மே முதலாம் திகதி யன்று சர்வதேச தொழிலாளர் தின கூட்டத்தையும், பேரணியையும் தேர்தல் பரப்புரைக் கூட்டமாக பிரதான 11

நாடாளுமன்றில் நேற்று

# 114 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது பட்ஜெட்!

கொழும்பு, மார்ச் 22
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் நேற்று 114 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. 11




யாழ். பல்கலையில்

## தேகாந்த நிலையில் மாணவிக்குப் பட்டம்

கண்ணீர் மல்கியபடி ஏந்தினர் பெற்றோர்

யாழ்ப்பாணம், மார்ச் 22
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தில் கல்வி கற்று கற்கைநெறியைப் பூர்த்திசெய்த பின்னர் சுகவீனம் காரணமாக உயிரிழந்த மாணவி 10

இடைவிலகிய

## 35 மாணவர்கள் மீள இணைப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 22
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பாடசாலைக் கல்வியில் இருந்து இடைவிலகிய 35 மாணவர்கள் மீளவும் இணைக்கப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணம் மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் 11



## நாட்டைப் பலவீனமாக்க எதிர்க்கட்சிகள் திட்டம்!

ஜனாதிபதி அநுர குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 22
நாட்டின் பொருளாதாரத்தைப் பலவீனப்படுத்தும் வகையில் எதிர்க்கட்சிகள் பொய்யுரைத்துவருகின்றன. 11

## போதைக்கு அடிமையான இளைஞர் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 22
போதைக்கு அடிமையான 18 வயதுடைய இளைஞர் ஒருவர் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். ஐஸ் மற்றும் கஞ்சா என்பனவற்றுக்கு 10

## கடலில் நீராடச் சென்ற இளைஞர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 22
மாதகல் கடற்பரப்பில் நீராடச் சென்ற இளைஞர் ஒருவர் கடலில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். பிரேமானந் சாருஜன் 11

## ஐஸ் போதையுடன் கைதானார் பெண்!

யாழ்ப்பாணம், மார்ச் 22
யாழ்ப்பாணம் இருபாலைப் பகுதியில் உள்ள இந்துமயானம் ஒன்றுக்குள் வைத்து, ஐஸ் போதைப்பொருளுடன் பெண்ணொருவர் கைது 11

## பலாலிப் பொலிஸுக்கு எதிராக ம.உ.ஆ.குழுவினர் விசாரணை!

யாழ்ப்பாணம், மார்ச் 22
சட்டவிரோத தையிட்டி திஸ்ஸ விகாரையை அகற்றுமாறு வலியுறுத்தி கடந்த 2023 ஆம் ஆண்டு மே மாதம் 23ஆம் திகதி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் முன்னெடுக்கப்பட்டிருந்த போராட்டத்தில் சட்டவிரோதக் கைதுகள் இடம்பெற்றமை தொடர்பில் பலாலிப் பொலிஸாருக்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்க்குழுவின் தலைமையகம் 10

## தவறான முடிவெடுத்து மூதாட்டி ஒருவர் சாவு!

யாழ்ப்பாணம், மார்ச் 22
யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில் 82 வயதான மூதாட்டியொருவர் தவறான முடிவெடுத்து நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்துள்ளார். 10

கடந்த மூன்று மாதங்களில்

## 37 சிறுவர்கள் மீது துஷ்பிரயோகம்!

யாழ்ப்பாணம், மார்ச் 22
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த மூன்று மாதங்களில் 37 சிறுவர் துஷ்பிரயோகங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுக்கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 11

## காணிப் பிரச்சினைகள் தீர்க்கப்படல் வேண்டும்

காணி ஆணையாளரிடம் ஆளுநர் கோரிக்கை!

யாழ்ப்பாணம், மார்ச் 22
வடக்கு மாகாணத்திலுள்ள அரச காணிகளில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உடன் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், காணி ஆணையாளர் நாயகம் சந்தனவிடம் கோரிக்கை முன்வைத்துள்ளார்.
வடக்கு மாகாணத்தில் உள்ள காணிப் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் உயர்மட்டக் கலந்துரை 10




## பிரபாகரனின் ஊரிலும் அரசால் அபிவிருத்தி!

அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 22
பிரபாகரன் பிறந்த ஊரில்கூட அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்காக நாங்கள் நிதியொதுக்கீடு செய்துள்ளோம் என்று அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய 11

## பிரபாகரனை வைத்து வாக்குத் தேடும் அரசு!

சாணக்கியன் எம்.பி. பதிலடி

கொழும்பு, மார்ச் 22
உள்ளூராட்சிசபைத் தேர்தல் நெருங்கும் நிலையில், தேசியத்தலைவர் பிரபாகரனின் பெயரை உச்சரிக்கும் நிலைக்கு கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் 11




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் வென்ற தமிழ் நாளிதழ்

| கொவிசெத | ஹந்தஹண ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத |
|---|---|---|---|---|---|---|
| திகதி 21.03.2025 | திகதி 21.03.2025 | திகதி 21.03.2025 | திகதி 21.03.2025 | திகதி 21.03.2025 | திகதி 21.03.2025 | திகதி 21.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4024 | சீட்டிழுப்பு இலக்கம் 1091 | சீட்டிழுப்பு இலக்கம் 050 | சீட்டிழுப்பு இலக்கம் 2130 | சீட்டிழுப்பு இலக்கம் 5782 | சீட்டிழுப்பு இலக்கம் 1812 | சீட்டிழுப்பு இலக்கம் 0357 |
| ஆங்கில எழுத்து S | வெற்றி இலக்கினம் சிம்மம் | ஆங்கில எழுத்து S | ஆங்கில எழுத்து T | ஆங்கில எழுத்து F | ஆங்கில எழுத்து A | ஆங்கில எழுத்து F |
| | | | சுப்பர் இலக்கம் 04 | | | |
| வெற்றி இலக்கங்கள் 17 22 37 41 | வெற்றி இலக்கங்கள் 28 43 54 60 | வெற்றி இலக்கங்கள் 1 1 0 1 | வெற்றி இலக்கங்கள் 27 40 50 60 | வெற்றி இலக்கங்கள் 2 8 9 2 9 6 | வெற்றி இலக்கங்கள் 23 29 38 73 | வெற்றி இலக்கங்கள் 9 2 9 6 |
| விசேட எழுத்து S | | | | | விசேட எழுத்து A | |

# உள்ளூராட்சித் தேர்தலில்
# 8,500 உறுப்பினர் பதவிகளுக்கு 80,000 வேட்பாளர்கள் போட்டி



கொழும்பு, மார்ச் 22

2025ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சித் தேர்தலில், அங்கீகரிக்கப்பட்ட அரசிற் கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்களைச் சேர்ந்தவர்கள் எனச் சுமார் கிட்டத்தட்ட 80 ஆயி ரம் வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர். இந்தக் குழுவில் 107 அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சிகளும் 49 சுயேச்சைக்குழுக்களும் போட்டியிடவுள்ளன.

இந்தத் தேர்தலில், 8 ஆயிரத்து 500 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அதேவேளை தேர்தல் வேட்பாளர்களின் பெயர்கள் அடுத்த வாரத்துக்குள் வர்த்தமானியில் வெளியிடப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி 21.03.2025 | தினம் வெள்ளிக்கிழமை | வெற்றி வாரம் 0490 |
| ஆங்கில எழுத்து Q | வெற்றி இலக்கம் 9 1 4 0 7 8 | |

| Super Ball DLB | | |
|---|---|---|
| திகதி 21.03.2025 | தினம் வெள்ளிக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் 2756 | ஆங்கில எழுத்து O | வெற்றி இலக்கம் 51 52 59 61 |

| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி 21.03.2025 | தினம் வெள்ளிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து Z | வெற்றி இலக்கம் 12 25 29 31 | வெற்றி வாரம் 4917 |

| SASIRI DLB | | |
|---|---|---|
| திகதி 21.03.2025 | தினம் வெள்ளிக்கிழமை | |
| வெற்றி வாரம் 0647 | வெற்றி இலக்கம் 09 14 34 | |

| லக்ன ராசி DLB | | |
|---|---|---|
| திகதி 21.03.2025 | தினம் வெள்ளிக்கிழமை | |
| மகரம் | வெற்றி இலக்கம் 02 17 35 49 | சீட்டிழுப்பு வாரம் 4468 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி 21.03.2025 | தினம் வெள்ளிக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து U | சுப்பர் இலக்கம் 37 | வெற்றி இலக்கம் 02 05 40 69 | வெற்றி வாரம் 1932 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி 21.03.2025 | தினம் வெள்ளிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து W | வெற்றி இலக்கம் 22 25 60 66 | வெற்றி வாரம் 2582 |

# ரணில் வந்தால் அரசு நடுங்கும்

## மனுஷ தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 22

ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றம் வந்து ஒரு தடவை உரையாற்றினால் தேசிய மக்கள் சக்தியிலுள்ள 159 பேரும் ஆட்டம் கண்டுவிடுவார்கள். அதனால்தான் தற்போது ரணில் குறிவைக்கப்பட்டுள்ளார் என்று முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய மக்கள் சக்தியினர் தற்போது ரணில் விக்கிரமசிங்க வைத்தான் குறிவைத்து தாக்கிவருகின்றனர். அவரது வெளிநாட்டுப் பயணம் பற்றிக்கூட பேசுகின்றனர். தற்போது பட்டலந்த அறிக்கை கையிலெடுக்கப்பட்டுள்ளது. ஏனெனில் ரணில் விக்கிரமசிங்கதான் தற்போதைய அரசுக்குப் பெரும் சவாலாகும் - என்றார். (ச-25,44)

# வவு. கல்வியியற் கல்லூரியில் மாணவர்கள் துன்புறுத்தல்!

## ம. உரிமை ஆணைக்குழுவால் விசாரிப்பதற்கு குழு

வவுனியா, மார்ச் 22

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி தொடர்பில் விசாரணை நடத்த மூவர் கொண்ட குழு கல்வியமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளதாக மனிதவுரிமை ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் த.கனராஜ் தெரிவித்துள்ளார்.

வவுனியா கல்வியியற் கல்லூரி தொடர்பாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடு தொடர்பில் ஊடகவியலாளரால் கேட்கப்பட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா கல்வியியற் கல்லூரியில் கல்வி பயிலும் ஆசிரிய மாணவர்கள் துன்புறுத்தப்படுகின்றனரெனப் பெற்றோர் சிலரால் மனிதவுரிமை ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய காரியாலயத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த முறைப்பாடு தொடர்பில் கல்வி அமைச்சிடம் விளக்கம் கோரியிருந்தோம். கல்வி அமைச்சினால் கல்வியற் கல்லூரிகளுக்குப் பொறுப்பாக இருக்கின்ற பிரதான ஆணையாளர் ஊடாக விசாரணை நடத்த மூவர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. விசாரணைகளின் பின் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (ச-110)

# பதவிவிலகல் வதந்தியே!

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 22

பொலிஸ் செய்தித் தொடர்பாளர் புத்திக மனதுங்க, தான் பதவி விலகவில்லை என்று தெரிவித்துள்ளார்.

நான் இடமாற்றத்திற்கான கோரிக்கையைச் சமர்ப்பித்துள்ளேன். தேசிய பொலிஸ் ஆணையம் மற்றும் தொடர்புடைய அதிகாரிகளால் பொருத்தமான நியமனம் செய்யப்படும் வரை, நான் பொலிஸ் செய்தித் தொடர்பாளர் பதவியில் தொடர்ந்து பணியாற்றுவேன் என்று அவர் விளக்கமளித்துள்ளார்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மனதுங்க பதவி விலகினாரென ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்த நிலையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# தமிழர் அபிலாசைகளுக்காகவே முன்னணியுடன் கூட்டணி

## அருந்தவபாலன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 22

தமிழ்த் தேசிய மக்கள் முண்ணனிக்கு ஆதரவை வழங்கியது தேர்தலுக்கான ஆதாயமல்ல. தமிழ்த் தேசிய அபிலாசைகளை அடிப்படையாகக் கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டது. தமிழ் மக்களுடைய இருப்பைத்தக்க வைக்கவே கூட்டிணைந்துள்ளோம் என்று தென்மராட்சி சிவில் சமூகச் செயற்பாட்டாளர் அருந்தவபாலன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமை அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழர் மீது இனப்படுகொலை புரிந்துள்ள வாளேந்திய சிங்கத்தின் கோரமுகத்தை சர்வதேசத்தின் மத்தியில் வெளிக்கொணரவேண்டும்.

அதற்கு நாங்கள் இன்னும் பலமான கூட்டை உருவாக்கி அரசியல் அபிலாசைகளை அடையவேண்டியுள்ளது. அந்தவகையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை வலுவூட்டவேண்டிய தேவை உள்ளது. தமிழ் மக்களின் அவாவும் தமிழ்த் தலைமைகளின் கூட்டிணைவே - என்றார். (ச-25)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வேட்புமனுக்களில் முறைகேடு; தேவையற்ற குற்றச்சாட்டு!

## கடற்றொழில் அமைச்சர் ஆதங்கம்

**யாழ்ப்பாணம், மார்ச் 22**

**யாழ்ப்பாண உள்ளூராட்சிமன்றத் தேர்தல் வேட்புமனுத்தாக்கலின்போது முறைகேடு நடந்துள்ளதாகக் கூறப்படுவதில் எந்தவித உண்மையும் இல்லை. இவ்வாறான குற்றச்சாட்டுகள் என்பது வெற்றுக்கதைகளே என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.**

யாழிலுள்ள உள்ளூராட்சிமன்றங்களுக்கான வேட்புமனுத்தாக்கலின்போது குழறுபடிபள் அல்லது சதி நடவடிக்கைகள் இடம்பெற்றிருப்பதாக சில தரப்புகள் முன்வைத்த குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த வேட்புமனுக்களை தாக்கல்செய்கின்ற முறைமைகள் தொடர்பாகவும் என்ன செய்ய வேண்டும் என்பது தொடர்பாகவும் சகலருக்கும் பல்வேறு அறிவுறுத்தல்களும் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன. இந்த விடயங்கள் எல்லோருக்குமே நன்றாகத் தெரியும். தாங்கள் தவறுகளை இழைத்துவிட்டு எங்கள் மீது பழிபோடுவது நியாயமற்றது. தங்களது இயலாமையை மறைப்பதற்கு தேசிய மக்கள் சக்தியைப் பயன்படுத்த வேண்டாம்.

தேவையில்லாத விமர்சனங்களை எண்ணி நாம் அலட்டிக்கொள்ளமாட்டோம். எங்களுடைய வெற்றி உறுதியானது -என்றார். (ச-125)




ஆனைக்கும் அடி சறுக்கிற மாதிரி இந்தமுறை உள்ளூராட்சி எலக்சனில கனக்கக் கட்சியளின்ர வேட்புமனுக்களை வடக்கிலை நிராகரிச்சுப் போட்டினம். பொதுவா ஏதாவது ஒண்டிரண்டு வேட்புமனுக்கள் தான் இப்பிடி நிராகரிக்கப்படுறதைக் கேள்விப்பட்டிருப்பம். ஆனால் இந்தமுறை என்னெண்டால், ஒரு சுயேச்சைக்குழுவின்ர எல்லா வேட்புமனுவும் நிராகரிக்கப்பட்டிருக்கு. சரி அந்த சுயேச்சைக் குழுவுக்குத்தான் வேட்பு மனு நிரப்பிறதில அனுபவம் இல்லையெண்டுவிட்டாலும், கனகாலம் அரசியலில பழம் திண்டவைகூட இப்பிடி கன இடங்களில சறுக்கினதுதான் என்னெண்டு விளங்காமல் கிடக்குது. அப்பிடி அவையளின்ர வேட்புமனுக்களை நிராகரிச்சதுக்கு பிறப்புச்சான்றிதழ் பிரச்சினைதான் காரணமாம். இதுவரைக்கும் எலக்சனில போட்டியிடுற ஆக்களின்ர பிறப்புச்சான்றிதழின்ர போட்டோக்கொப்பியை சேர்த்துக்குடுத்தாலே அதை ஏற்பினம். ஆனால் இந்தமுறை . அப்பிடிச் செய்ய ஏலாது எண்டு போன 16 ஆம் திகதியே தேர்தல் திணைக்களம் தெளிவா அறிவிச்சுப்போட்டுது.

சரியான உறுதிப்படுத்தல் இல்லாத பிறப்புச்சான்றிதழை வேட்புமனுவோட சேர்த்துக் குடுத்திருந்தாலோ, 25 வீதம் பெண் வேட்பாளர்களோ, இளம் ஆக்களோ போடுப்படமால் இருந்தாலோ, இளம் ஆக்களை குறிச்சுக் காட்டாட்டியோ அந்த வேட்புமனு நிராகரிக்கப்படுமெண்டு அந்த அறிவித்தலில தெளிவா இருந்திருக்கு. 'தேர்தல் அறிவிச்ச பிறகு இப்பிடிச் சொன்னால் நாங்கள் என்ன செய்யிறதெண்டு' கட்சியள் கேக்கிறதில நியாயமில்லை. ஏனெண்டால் மற்றக் கட்சியளின்ர வேட்புமனுக்களில எல்லாம் சரியாத்தானே வைச்சிருக்கினம். அவை புதிசா வந்த அறிவித்தலைப் பார்த்து. வேட்புமனுவைச் சரியா போட்டவையெண்டால், ஏன் மற்றவையால போடமுடியேலை? அப்ப கட்சியளிலதான் பிழையேதவிர, தேர்தல் விதியில பிழை இல்லை எண்டதுதானே அர்த்தம். எண்டாலும் தங்கட மனச்சாந்திக்காக வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்ட கட்சியள் வழக்குப் போடப்போயினமெண்டு சொல்லுகினம். அப்பிடி வழக்குப் போட்டால், அந்தச் சபையளின்ர தேர்தலும் தள்ளிப்போகும். இப்பிடித்தான் பூநகரிக்கும், மன்னாருக்கும் போட்ட வழக்கு முடியாததால, இந்தமுறை அங்க முதல்ல தேர்தல் நடக்கும் எண்டு அறிவிக்கேலை. பிறகு முதல் போட்ட வேட்புமனு செல்லாது எண்டபடியால ஓட்டோமெட்டிக்கா அந்த வழக்கை கைவாங்கினதால தான் இப்ப நாலைஞ்சு நாள் பிந்தியெண்டாலும் அங்கையும் எலக்சனுக்கு வேட்புமனுவை போடலாமெண்டு அறிவிச்சவை. அதைமாதிரி இவையள் வழக்குப் போட்டால், இந்தச் சபையளின்ர வழக்கும் வருசக்கணக்கா இழுபடுகுதோ தெரியேலை.

வழக்கமா தேர்தலில வெண்டால்தான் கட்சியள் வெடியெல்லாம் கொளுத்தி, பேஸ்புக்கில வெற்றிப்பதிவெல்லாம் போட்டு ஆரவாரம் செய்யிறவை. இந்த முறை என்னெண்டால் 'எங்கட எல்லா வேட்புமனுவும் ஏற்றுக்கொண்டிட்டினம்– எண்டதைக்கூட பெரிய வெற்றியா பேஸ்புக்கில அந்தந்தக் கட்சிக்காரர் கொண்டாடிக்கொண்டிருக்கினம். எலக்சனில வெல்லாட்டியும் பரவாயில்லை, ஆனால் வேட்புமனுவைச் சரியாக் குடுத்தாலே காணும் எண்ட நிலைக்கு கொண்டந்ததே தேர்தல் திணைக்களத்தின்ர வெற்றிதான் கண்டியளோ.

padsi@uthayan.com – பட்சி

## 'பொன்மணி' திரைப்படக்காட்சி

தர்மசேன பத்திராஜாவின் நெறியாள்கையில் உருவான 'பொன்மணி' திரைப்படம் யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அண்மையில் மறைந்த நாடகவியலாளர் குழந்தை ம.சண்முகலிங்கத்துக்கு அஞ்சலியாக- குடும்பபாரத்தைச் சுமக்க நேரும் சராசரி யாழ்ப்பாண இளைஞன் பாத்திரத்தில் அவர் சிறப்புற நடித்த- 48ஆண்டுகள் முன்னர் யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்ட இத்திரைப்படம் நடைபெறுகிறது யாழ்ப்பாண சமூகத்தில் நிலவும் சீதனப்பிரச்சினை, சாதி, மத வேறுபாடுகளை மையமாகக் கொண்டதாக இக்கதை அமைந்துள்ளது.

இதற்கு அனுமதி இலவசம் என்றும் யாழ்ப்பாணத் திரைப்படக்கழகம் தெரிவித்துள்ளது. (ச-41)

## கைவினைப்பொருள்களை சந்தைப்படுத்த புதிய திட்டம்!

இலங்கையின் கைவினைப்பொருள்களை சர்வதேச சந்தைக்கு அறிமுகப்படுத்த உதவும் வகையில் புதிய திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய நிறுவனம் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திசபையின் கூட்டு முயற்சியாக இந்தத் திட்டம் இடம்பெறவுள்ளது. உள்ளூர் வடிவமைப்பாளர்களுக்கு உலகளாவிய வாய்ப்புகளை உருவாக்குவதும் இதன் நோக்கமாகும். (ச-இ)

### *15 வயதுச் சிறுமிக்கு*

## பாலியல் துன்புறுத்தல்; இளைஞருக்கு மறியல்

வவுனியா, மார்ச் 22

வவுனியா தோணிக்கல் பகுதியில் 15 வயது சிறுமி ஒருவருக்கு பாலியல் துன்புறுத்தல் செய்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறுமியின் தாயாரால் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய குறித்த இளைஞர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட இளைஞரை மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்தியபோது அவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (ச-18)



## சட்டவிரோத மீன்பிடி வலைகள் பறிமுதல்

கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டவிரோத வலைகளைப் பயன்படுத்தி அனுமதிப்பத்திரம் பெறாது மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர்களிடமிருந்து அவர்களின் வலைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கடற்றொழில் சங்கங்கள் வைத்த முறைப்பாட்டையடுத்து கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப்பணிப்பாளர் பாலசுப்பிரமணியம் றமேஸ் கண்ணா தலைமையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது பெருமளவு தங்கூசி வலைகள், கலங்கட்டி வலைகள் மற்றும் அவற்றின் தடிகள் என்பன மீட்கப்பட்டன.

அவற்றை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக கடற்றொழில் திணைக்கள உதவிப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ச-41-113)

## ஐ.தே.க. மேயர் வேட்பாளர் விவரங்கள் அடுத்தவாரம்

கொழும்பு, மார்ச் 22

ஐக்கிய தேசியக் கட்சி கொழும்பு மாவட்டத்தில் 13 உள்ளூராட்சிமன்றங்களிலும் யானைச் சின்னத்தில் களமிறங்கவுள்ளது. அடுத்தவாரம் செயற்குழுக் கூட்டத்தின்போதே கொழும்பு மாநாகர சபை உள்ளிட்ட ஏனைய மாநாகர சபைகளுக்கான மேயர் வேட்பாளர்கள் தொடர்பில் தீர்மானிக்கப்படும்.

இவ்வாறு அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி கொழும்பு மாவட்டத்தில் 13 உள்ளூராட்சி மன்றங்களிலும் யானை சின்னத்தில் களமிறங்கவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (எ-இ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)



**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான காரியங்களி லும் கூடுதல் கவனம் தேவை. கணவன் மனைவிக்கிடையே வீண் வாக்குவாதம் ஏற்படக்கூடும். ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது.



**இடபம்:** வாழ்க்கைத் துணையின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்ச்சி அடைவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். காரியங்கள் சாதகமாக முடியும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் எதிர் பார்த்தபடியே இருக்கும்.



**மிதுனம்:** புதிய முயற்சிகளைத் தொடங்குவதற்கு உகந்த நாள். சிலருக்கு சகோதர வகையில் எதிர்பாராத ஆதாயம் கிடைக்கும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.



**கடகம்:** எதிர்பாராத பணவரவு மகிழ்ச்சியில் ஆழ்த்தும். சிலருக்குக் குடும்பத்துடன் குல தெய்வக்கோயிலுக்குச்சென்று பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். வீட்டில் உற்சாகம் ஏற்படும்.



**சிம்மம்:** உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. திடீர் செலவுகள் ஏற்பட்டாலும், தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். சுபச்செலவுகள் ஏற்படக்கூடும். அலுவலகத்தில் எதிர்பார்த்த சலுகை இழுபறிக்குப் பிறகு கிடைக்கும்.



**கன்னி:** எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும் சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் பொருள் சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத்துணை உங்கள் தேவையறிந்து பணஉதவி செய்வார்.



**துலாம்:** எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தடை, தாமதம் ஏற்படும். சகோதரர்கள் உதவி கேட்டு நச்சரிப்பார்கள். கொடுத்த கடனில் ஒரு பகுதி திரும்பக் கிடைக்கும். சுபச்செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.



**விருச்சிகம்:** தேவையான பணம் கையில் இருப்பதால், செலவுகளை சமாளித்து விடுவீர்கள். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். தேவை யற்ற பிரச்சினைகளைத் தவிர்க்கவும். வியாபாரத்தில் பங்குதாரர்களால் சங்கடம் ஏற்படக்கூடும்.



**தனுசு:** எதிலும் பொறுமையாக இருப்பது நல்லது. திடீர் செலவுகளால் கடன் வாங்க நேரிடும். செலவுகள் ஏற்படக்கூடும். அலுவலகத்தில் வழக்கமான நிலையே காணப்படும். கவனமாக இருக்கவும்.



**மகரம்:** பிள்ளைகளால் பெருமை உண்டாகும். நண்பர்களுக்காகச் செலவு செய்ய வேண்டி வரும். அலுவலகத்தில் மிகவும் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும். அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும்.



**கும்பம்:** உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாக முடியும். உறவினர் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சுபச்செலவுகள் ஏற்படும். மனவருத்தங்கள் நீங்கும்.



**மீனம்:** அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பும் சிலருக்கு ஏற்படக்கூடும். சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். மனதில் தேவையற்ற குழப்பம் ஏற்பட்டு நீங்கும்.

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்

# 2025 – 2027

கிரகப்பெயர்ச்சிகளில் முக்கியமான கிரகப் பெயர்ச்சியாகப் பார்க்கப்படுவது சனிப்பெயர்ச்சி. நாம் செய்யும் கர்மங்களுக்கு ஏற்ப நல்ல பலன்களையும், கெடுபலன்களையும் கொடுப்பவர் சனிபகவான். அதனால், சனிபகவானின் பெயர்ச்சி என்பது முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

திருக்கணித பஞ்சாங்கத்தின்படி 2025 ஆம் ஆண்டில் சனிப்பெயர்ச்சியானது 2025 மார்ச் 29 ஆம் ஆம் திகதி நடைபெறவுள்ளது.

மீனராசிக்கு வரும் சனிபகவான் தொடர்ந்து 03.06.2027 வரை இரண்டரை வருட காலத்துக்கு இந்த ராசியில் சஞ்சாரம்செய்து அருளாசி வழங்குவார். மீனராசியில் இருந்து தனது மூன்றாம் பார்வையால் ரிஷப ராசியையும், ஏழாம் பார்வையால் கன்னி ராசியையும், பத்தாம் பார்வையால் தனுசு ராசியையும் பார்க்கிறார்.



## கன்னி



முன் வைத்த காலை பின்வைக்காமல் வெற்றிநடைபோடும் கன்னி ராசி அன்பர்களே நீங்கள் யாரையாவது நம்பி விட்டால் வாரி வழங்கி விடுவீர் கள். எடுத்த முடிவில் இருந்து சிறிதும் இறங்கி வரமாட்டீர்கள். எந்தவிதமான சிரமங்களையும் சமாளித்து வாழ்வில் வெற்றிக்கனியைப் பறிப்பீர்கள். கொஞ்சம் கர்வம் உடையவர்கள் நீங்கள்.

இதுவரை உங்களது ரணருண ரோக ஸ்தானத்தில் இருக்கும் சனி பகவான் விலகி களத்திர ஸ்தானத்திற்கு செல்கிறார். மூன்றாம் பார்வையால் பாக்கிய ஸ்தானத்தையும், ஏழாம் பார்வையால் ராசியையும், பத்தாம் பார்வையால் சுக ஸ்தானத்தையும் பார்க்கிறார்.

| நட்சத்திரம் | சனியின் நிலை |
|---|---|
| மேடம் | நீசம் |
| இடபம் | நட்பு |
| மிதுனம் | நட்பு |
| கடகம் | பகை |
| சிம்மம் | பகை |
| கன்னி | நட்பு |
| துலாம் | உச்சம் |
| விருச்சிகம் | பகை |
| தனுசு | நட்பு |
| மகரம் | ஆட்சி |
| கும்பம் | ஆட்சி |
| மீனம் | நட்பு |

இந்த சனிப்பெயர்ச்சியால் இதுவரை இருந்த கடினமான சூழ்நிலையிலிருந்து விடுபடுவீர்கள். குடும்பத்தில் உற்சாகம் கரைபுரளும். புத்திரர்களாலும், பேரப்பிள்ளைகளாலும் மகிழ்ச்சி ஏற்படும். உயர்ந்த பதவிகள் உங்களைத் தேடி வரும். சமுதாயத்தில் உயர்ந்தோரின் நட்பும், ஆதரவும் கிடைக்கும். செய்தொழிலை விரிவுபடுத்த பெரிய அளவில் கடன்வாங்குவீர்கள். அதேநேரம் அனைத்து விவரங்களை யும் நன்றாகப் புரிந்து கொண்ட பிறகே ஆவணங்களில் கையொப்பமிடவும். மன அழுத்தம் குறைந்து தெளிவாகச் சிந்திக்கும் காலமிது என்பதால் உங்களுடைய உள்ளம் தெளிவான வழிகளிலேயே இட்டுச்செல்வதற்கு வாய்ப்புகள் அதிகம். வம்பு, வழக்குகளிலிருந்தும் விடுபட்டு புதிய மனிதனாக ஆவீர்கள். ஆன்மீகத்தில் புதிய விஷயங்களை அறிந்து கொள்வீர்கள். தர்ம காரியங்களுக்குச் செலவுசெய்வீர்கள்.

உங்களைப் பற்றிப் புறம் பேசும் நபர்களை அடையாளம் கண்டு, அவர்களிடமிருந்து நாசூக்காக விலகுவதே நல்லது. எந்த வேலையை எடுத்தாலும் உறுதியான எண்ணத்துடன் பணியாற்ற வேண்டும். நீங்கள் சார்ந்திருக்கும் துறையில் நன்றாகவே முன்னேறுவீர்கள்.

**உத்யோகஸ்தர்களுக்கு:** வேலைப்பளு அதிகரிக்கத் தொடங்கும். உழைப்பிற்கேற்ற ஊதியத்தைப் பெறுவதில் தடை ஏற்படாது. ஆனாலும் சக ஊழியர்கள் உங்களிடம் பொறாமை கொள்ளலாம். எடுத்த காரியங்களில், சில சந்தர்பங்களில் கால தாமதம் ஏற்படலாம். உடலில் சோர்வும், மனதில் தெளிவின்மையும் கூட உண்டாகலாம். கொடுக்கல், வாங்கலில் இருந்த சிரமங்கள் மறையும்.

முயற்சிகள் எதிர்பார்த்த பலன் தராமல் போகலாம். வீண் அலைச்சல் உண்டாகலாம். குடும்பத்தில் இருப்பவர்கள்உங்களை ஆலோசனை செய்யாமல் தானாக எதையும் செய்வது உங்களுக்கு மனவருத்தத்தை தரலாம். கணவன், மனைவிக்கிடையே வீண்வாக்குவாதங்கள் ஏற்படலாம் கவனம் தேவை. பிள்ளைகளுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. எதிலும் முழு கவனத்துடன் ஈடுபடுவது நன்மையை தரும். பணவரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். மற்றவர்களுக்கு உதவப் போய் வீண்பழி ஏற்படலாம் கவனம் தேவை. தொழில் தொடர்பான அலைச்சல் அதிகரிக்கும். ஆனால் பணவரத்து திருப்திகரமாக இருக்கும். மற்றவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பு கொடுப்பது நன்மை தரும். அரசியல்துறையினருக்குக் கூடுதல் பணிச்சுமையை ஏற்க வேண்டி இருக்கும். மேலிடத்திடம் உங்களது கருத்துகளைத் தெரிவிக்கும்போது கவனமாக பேசுவது நல்லது.

வீண் அலைச்சல், தடை தாமதம் ஏற்படலாம் கவனம் தேவை. புதிய முயற்சிகளைத் தள்ளிப் போடுவது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் வெற்றிபெற அதிக ஈடுபாட்டுடன் படிப்பது நல்லது. வீண்அலைச்சல் ஏற்படலாம். தனது வாய்ச் சாமர்த்தியத்தால் தன்னைக் காப்பாற்றிக் கொள்வார்கள். பிரிந்து சென்றவர்கள் மீண்டும் வந்து சேரலாம். எதிர்பார்த்த பணம் வந்துசேரும். விருந்து கேளிக்கை நிகழ்ச்சிகளில் பங்கேற்க நேரிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



## ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது!

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 2025ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கும் அதிகமான பலத்தைக்கொண்டுள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால், பட்ஜெட்டை வெற்றிகரமாக நிறைவேற்றுவது எந்தவொரு சிரமமும் இல்லாத காரியமே. இன்னும் சொல்லப்போனால் 'எப்போதோ முடிந்த காரியம்' போன்றதுதான் இந்த பட்ஜெட்டும், அதன் மீதான வாக்கெடுப்பும். நேர்மையாகக் கூறவேண்டுமானால், கடந்த அரசாங்கங்களை விடவும் ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மக்களின் பிரதான பிரச்சினைகளைக் கவனத்திற்கொண்டே பட்ஜெட்டைத் தயாரித்திருந்தது. யாழ்ப்பாணப் பொதுநூலகத்துக்கான ஒதுக்கீடு தொடக்கம், வட்டுவாகல் பாலத்துக்கான ஒதுக்கீடு வரையில் வடக்கிலும் அரசாங்கத்தின் ஆழமான பார்வையை பட்ஜெட்டில் உணரக்கூடியதாக இருந்தது. ஆனால், இந்தத் திட்டங்களும் ஒதுக்கீடுகளும் வெறுமனே அறிக்கைகளுடன் முடிந்துவிடக்கூடாது என்பதே மக்களின் தற்போதைய எதிர்பார்ப்பாக அமைந்திருக்கின்றது.

சுதந்திரக்கட்சியின் அரசாங்கமாக இருக்கலாம், ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கமாக இருக்கலாம், பொதுஜன பெரமுனவின் அரசாங்கமாக இருக்கலாம் எந்தவொரு அரசாங்கமும் இதுவரை பட்ஜெட்டில் கூறியதையெல்லாம் முழுமையாக நிறைவேற்றிய வரலாறு இல்லை. முன்னாள் ஜனாதிபதி ரணிலின் காலத்தில், உள்ளூராட்சித் தேர்தலுக்காக பட்ஜெட் மூலம் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால், இறுதிவரை தேர்தலை நடத்துவதற்காக எந்த முயற்சியையும் அப்போதைய ஜனாதிபதி ரணில் எடுக்கவேயில்லை. நீதிமன்ற உத்தரவுகள்கூட ரணில் விக்கிரசிங்கவால் உதாசீனம் செய்யப்பட்டிருந்தன. இவ்வாறு பலநூறு சம்பவங்களை உதாரணமாகக் கூறிக்கொண்டே போகலாம்.

ஆதலால், பட்ஜெட்டை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றுவது முக்கியமல்ல. பட்ஜெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் உள்ளது உள்ளபடி நிறைவேற்றப்படுகின்றனவா என்பதே இங்கு பிரதானம். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிப்பீடம் ஏறிய சொற்பகாலங்களிலேயே அதாவது வெறும் ஆறு மாதங்களுக்கு உள்ளாகவே, வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில்லை என்ற பெரும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. புதிய அரசியலமைப்பு உருவாக்கம், காணி விடுவிப்பு, காணாமற்போனோர் விவகாரம், ஊழல் மோசடிகளை வெளிப்படுத்துதல், உயிர்த்தஞாயிறு தாக்குதல்தாரிகளை சட்டத்தின் முன்னால் நிறுத்துதல் என்று தற்போதைய அரசாங்கத்தின் பல வாக்குறுதிகள் கடலில் வீசப்பட்ட கல்லாக மாறியிருக்கின்றன.

ஆதலால், பட்ஜெட்டில் கூறப்பட்டுள்ள விடயங்களை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நிறைவேற்றுமா? என்பது பெரும் கேள்விக்குறியாகவே காணப்படுகின்றது. 'கடந்த அரசாங்கங்களைப் போன்றுதான் இந்த அரசாங்கமும்' என்று பெயரெடுத்துக் கொண்டிருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பட்ஜெட்டைத் தன்மீதான விமர்சனங்களைத் துடைத்தெறியும் வாய்ப்பாகப் பயன்படுத்த வேண்டும். அபிவிருத்திகளைப் பரவலாக்க வேண்டும், மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தவேண்டும். மாறாக, ஏடுகளில் இலக்கங்கள் இருப்பதால் எந்தப் பயனும் இல்லை.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com


நாளொரு நல்வார்த்தை

எல்லாச் செல்வங்களிலும் மிகவும் விலைமதிப்பற்றது நமக்கு நம்மீதுள்ள அதிகாரமாகும்.

— ஜோன் லாக்



## சிக்குன்குனியா நாட்டில் தீவிரம்



கொழும்பு, மார்ச் 22

இலங்கையில் நுளம்புகளால் பரவும் வைரஸ் நோயான சிக்குன்குனியா வேகமாகப் பரவி வருகின்றமை பதிவாகியுள்ளதாக சுகாதாரத் தரப்பினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 4 முதல் 7 நாள்கள் அடைகாக்கும் காலத்துக்குப் பிறகு, இந்தத் தொற்றுள்ள நுளம்புகள் வைரஸைப் பரப்பும். இந்த நோய் ஒருவருக்கு நேரடியாகப் பரவுவதில்லை நுளம்பு கடித்தால் மட்டுமே பரவுகிறது.

இதன் பாதிப்பாக, மூட்டுவலி. குறைந்தது ஒரு மாதமாவது நீடிக்கும்.

இந்தநிலையில் சிக்குன்குனியா பாதிப்பு அதிகரித்துவருவதால், அதன் அறிகுறிகள் குறித்து பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று சுகாதார நிபுணர்கள் வலியுறுத்தியுள்ளனர். (ச-இ)

## கிராண்ட்பாஸ் துப்பாக்கிச்சூடு பெண்ணொருவர் கைது



கொழும்பு, மார்ச் 22

கிராண்ட்பாஸ் நாகலகம் சாலையில் அண்மையில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் இரண்டுபேர் காயமடைந்த சம்பவத்துக்கு உதவிய குற்றச் சாட்டில் 24 வயதுடைய பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளில் பத்தரமுல்ல சிறப்புப் படை முகாமைச்சேர்ந்த அதிகாரிகள், ஒரு சந்தேகநபர் ஆகியோர் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)



## குடும்ப மருத்துவர் திட்டம் அறிமுகம்

கொழும்பு, மார்ச் 22

குடும்ப மருத்துவர் என்ற கருத்தை நாட்டுக்கு அறிமுகப்படுத்த சுகாதார அமைச்சு முடிவுசெய்துள்ளது.

இந்த விடயத்தை சுகாதார மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சர் ஹங்சக விஜேமுனி தெரிவித்துள்ளார்.

ஆரம்ப சுகாதார சேவைகளை வலுப்படுத்துவதும், பொதுமக்களுக்கு மிகவும் திறமையான சேவைகளை வழங்குவதும் இதன் நோக்கங்களாகும்.

இதன்கீழ், மூன்று கிராம அலுவலர் பிரிவுகளுக்கு தலா ஒரு மருத்துவர் நியமிக்கப்படுவார் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## வாய்ப்புற்றுநோயால் தினசரி மூவர் பலி!

கொழும்பு, மார்ச் 22

நாட்டில் வாய்ப்புற்றுநோய் காரணமாக நாளொன்றுக்கு மூன்று பேர் உயிரிழக்கின்றனர் என வாய்ப்புற்றுநோய் நிபுணர் மருத்துவர் ஆனந்த ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் வருடாந்தம் 3 ஆயிரம் வாய்ப் புற்றுநோயாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். புகையிலைப் பாவனையாலும் புகையிலையைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் பொருள்களைப் பயன்படுத்துவதாலும் வாய்ப் புற்றுநோய் ஏற்படுவதாக பரிசோதனைகள் மூலம் உறுதிசெய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

## உணவு கையாளுபவருக்கு விசேட ஊசிமருந்து திட்டம்

கொழும்பு, மார்ச் 22

உணவுத் தயாரிப்பு மற்றும் அது தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபடுவோருக்கு விசேட தடுப்பூசி வழங்கும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார பரிசோதகர்களின் சங்கத்தின் செயலாளர் சமில்முதுகுட தெரிவித்துள்ளார். சுகாதார மருத்துவ அதிகாரிகள் காரியாலய மட்டத்தில் இந்தத் தடுப்பூசி மருந்தைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. அதற்கமைய அவர்கள் மருத்துவ அறிக்கைமூலம் இதனை உறுதிப்படுத்தல் அவசியம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-25, சீ)

நாளை
ஞாயிற்றுக்கிழமை-பங்குனி- 09
23.03.2025
சுபநேரம் : 09.16- 10.46
ராகுகாலம் : 04.46 - 06.16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழைச்சேனை கடதாசி ஆலையை நவீனமயப்படுத்த நடவடிக்கை!



கொழும்பு, மார்ச் 22

தனியார்த்துறையின் பங்களிப்புடன் வாழைச்சேனை கடதாசி ஆலையை நவீனமயப்படுத்தி 500 தொன் வரை உற்பத்தியை அதிகரிப்பதே அரசாங்கத்தின் இலக்காகவுள்ளது. தொழிற்சாலையின் 330 ஏக்கர் பரப்பளவுக் காணியை பயன்படுத்தி பல்வகை உற்பத்தி வலயமாக அதனை உருவாக்குவதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமென கைத்தொழில் அபிவிருத்தி பிரதியமைச்சர் சத்துரங்க அபேசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே பிரதிஅமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

330 ஏக்கர் பரப்பளவில் வாழைச்சேனை கடதாசி ஆலைப் பிரதேசம் அமைந்துள்ளது. பல்வகை உற்பத்தி வலயமாக அந்தப் பிரதேசத்தை மாற்றுவதற்கும் எதிர்பார்த்துள்ளோம். அங்குள்ள மீதமான இயந்திரங்கள்,உபகரணங்களைத் திருத்தி எதிர்காலத்தில் 500 தொன் கடதாசிகளை உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

தற்போது அங்குள்ள இயந்திரங்கள் பழைமையானவை. புதிய தொழில்நுட்பத்துடன் உற்பத்தியை மேற்கொள்வதற்காக தனியார் துறையின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

# மஹிந்தவின் பாதுகாப்பு; தீர்ப்பை ஏற்கின்றோம்!

பெரமுன தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்புத் தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ஏற்கின்றோம் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி தெரிவித்துள்ளது. முறையான மதிப்பீடின்றி தமது பாதுகாப்புக் குறைக்கப்பட்டதால் அடிப்படை மனித உரிமை மீறப்பட்டுள்ளதாக உத்தரவிடுமாறு கோரி முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவால் தாக்கல்செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனு உயர்நீதிமன்றத்தால் கடந்த செவ்வாய்க்கிழமை நிராகரிக்கப்பட்டது. நீதிமன்றத்தை நம்பும் கட்சியினர் நாம். எனவே நீதிமன்றத் தீர்ப்பை ஏற்கின்றோம் என்றும் தெரிவித்துள்ளது. (ச-33-44)


## காணி விற்பனைக்கு

புலோப்பளை பளையில் காணி விற்பனைக்குண்டு.

076 564 7848

57786 (N-1)

## சாரதி தேவை

தாவடி, கொக்குவிலில் இயங்கிவரும் பிரபல்யமான அரிசியாலை ஒன்றிற்கு சாரதி தேவை. (பாரவூர்தி சாரதி)

076 096 9728

(CS/57726) J-1

## பெயர் மாற்றம்

535, வளநகர் யோகபுரம் மல்லாவியில் வசிக்கும் **இராமு சிவராணி** ஆண் ஆகிய நான் எனது பெயரை **இராமு சிவஞானம்** என மாற்றம் செய்வதோடு, இனிவரும் சகல ஆவணங்களிலும் **இராமு சிவஞானம்** என்றே கையொப்பமிடுவேன் என இலங்கை சோசலிச குடியரசுக்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

(cs.57782) (N-1) **இராமு சிவஞானம்**

## காணி தேவை

காற்றாலை மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டதிற்காக மருதங்கேணி பிரதேச செயலகதிற்கு உட்பட்ட J/425, J/426, J/428 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் மாமுனை தொடக்கம் மருதங்கேணி வரையான கடற்கரை வீதிக்கு இரு புறமும் காணிகளை வாங்குவதற்கு நீ ண் ட கால குத்தகைக்கு தேவை. இந்த பிரதேசங்களில் காணினளை விற்கவோ அல்லது குத்தகைக்கு வழங்பவோ விரும்புவோர் நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

நிறுவனம்:
Musalpetti Wind Power (Pvt) Ltd
முகவரி:
**இல 310. கோயில் வீதி. நல்லூர். யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி இல : 077 455 9949**

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
**ஒரு சதுர அடி - 75 ரூபாய்**
**நிலம் இழுத்து பதிக்க - 100 ரூபாய்**

077 334 1281

## தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு

**சமூக ஊடங்கள் பாடசாலைகள் கல்விச்சமூகத்தினருக்கான அறிவித்தல்**

திரு.ப.கஜேந்திரன் என்பவர் மேற்கொண்ட மோசடிகள் காரணமாக 21.04.2024 இல் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி இந்நிலையத்தின் அடிப்படை உறுப்புரிமையிலிருந்து நீக்கப்பட்டுவிட்டார். இவர் ஊடகங்களில் தான் தேசிய வெளிக்கள நிலையத்தின் அதிகாரம்மிக்க செயற்குழு உறுப்பினர் எனவும் செயற்றிட்டப் பணிப்பாளர் எனவும் போலியாக விளம்பரம் செய்வதுடன் பாடசாலை விழாக்களிலும் இப்பதவியுடன் விருந்தினராகவும் கலந்துவருகிறார். **திட்டப்பணிப்பாளர்** என்ற பதவி நிலையத்தில் இல்லாத பதவி என்பது குறிப்பிடத்தக்கது. நிலையம் சார்பாக இவரது தொடர்புகளிற்கு தேசிய வெளிக்கள நிலையம் பொறுப்பேற்காது என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

**செயலாளர்.**

(cs 57781) (N-1)

அன்பே சிவம் கருணையே மேன்மை

## ஆன்மீக பெருவிழா

**மாதங்கி சுவாமிகள் வவுனியா வருகிறார்**
**அகில இலங்கை சற்சங்கம் தவசிக்குளம் - வவுனியா**
**ஸ்ரீ சாமுண்டாதேவி சமேத ஞான வைரவர் ஆலயத்தில்**
**நாளை (23.03.2025) ஞாயிற்றுக்கிழமை**
**காலை 8.30 மணியளவில் ஆரம்பமாகும்.**

ஆன்மீக பெருவிழாவில் கரம்பொன் மேற்கு, திருமங்களஞ்சேரி ஸ்ரீராஜமாதங்கீஸ்வரி ஆலய குரு யாக சித்தர் மாதங்கி சுவாமிகள் கலந்துகொண்டு சிறப்பித்து மாணவ, மாணவிகளுக்கு கல்வியில் முன்னேற்றம் அடைய முத்திரை பயிற்சிகளை அறிமுகப்படுத்தி அனைவரையும் ஆசிர்வதிப்பார்.

**அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

செயலாளர்
**076 545 9560**

(cs 57784) (N-1)

## மானிப்பாய் பரிஸ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
## பாரவூர்தி பகிரங்க ஏல விற்பனை

எமது சங்கத்திற்கு சொந்தமான 24ஸ்ரீ 9355 இலக்க IZUZU ரக பாரவூர்தி பகிரங்க ஏலத்தில் 05.04.2025 ம் திகதி சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு பொன்னாலை வீதியில் உள்ள மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற உள்ளது. அவ் லொறியினை பார்வையிட விரும்புவோர் அலுவலக நாட்களில் காலை 8.30 மணி தொடக்கம் பி.ப 4.00 வரை பார்வையிட முடியும். இவ் ஏல விற்பனையில் கலந்து கொள்ள விரும்புவோர் ஏல விற்பனைத்திகதி அன்று காலை 9.30 மணிக்கு முன்னர் மீளளிக்க முடியாத முற்பணமாக ரூபா 1000.00 ம் மீளளிக்கக் கூடிய முற்பணமாக ரூபா 10000.00 ம் தலைமைக் காரியாலயத்தில் செலுத்தி பற்றுச் சீட்டினைப் பெற்று இவ் ஏல விற்பனையில் கலந்து கொள்ள முடியும் என்பதனை தங்களுக்கு அறியத்தருகின்றேன்.

**தலைவர்**
**மானிப்பாய் பரிஸ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
**தொலைபேசி இலக்கம் :- 0212255011**

(CR/43313) J-1

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




**Rev . சிவசம்பு சதீஸ்வரராசா**
(B.Th. M.Th.M.A. Jaffna
சமாதான நீதிவான் J.P
UNA Life Member)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின்
**39 ஆவது பொது பட்டமாளிப்பு விழாவில்**
**முது மாணி பட்டத்தை** பெற்ற எமது
திருச்சபை போதகர் சதீஸ் அவர்களை பாராட்டி அகமகிழ்வதோடு மேலும் பட்டங்களைப் பெற்று உயர தேவன் ஆசீர்வதிக்கட்டும் என வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
**இயேசுவின் வாசஸ்தல தேவாலய விசுவாசிகள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர்தினமும் கருத்தரங்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ். மாவட்டக் கூட்டுறவுச்சபையின் மகளிர் குழு நடத்தும் மகளிர் தினமும் சிறப்புக் கருத்தரங்கு நிகழ்வும் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கூட்டுறவுச்சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மாவட்ட மகளிர் குழுவின் உபதலைவி திருமதி சி. புனிதவதி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் கே. சந்திரசேகரன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ச-41-17)


## மரண அறிவித்தல்



தோற்றம் 31 . 07 . 1980

மறைவு 19 . 03 . 2025

### கோடீஸ்வரன் ஐயா செந்தூர்செல்வி

அனலை தீவைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கோடீஸ்வரன் ஐயா செந்தூர் செல்வி அவர்கள் கடந்த (19.03.2025) புதன்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் சத்தியமூர்த்தி ஐயர் - பரமேஸ்வரி அம்மாள் தம்பதியின் அன்பு மகளும், நவரத்தின ஐயர் கோடீஸ்வரன் ஐயரின் (கீரிமலை முத்துமாரி அம்பாள் ஆலய ஆதின கர்த்தா) அவர்களின் அன்பு மனைவியும், சத்தியசீலன் ஐயா, ஜெயசீலன் ஐயா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்றுமுன்தினம் (20.03.2025) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

ஞான வைரவர் வீதி,
கோண்டாவில்.

தகவல் : கணவர் மற்றும் குடும்பத்தினர்

(CS/ 57799) J-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 25 . 10 . 1951

மறைவு 07 . 03 . 2025

### அழகரட்ணம் சாள்ஸ் மனோகரன்

உரும்பிராய் தெற்கு, உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் கிழக்கு 35 Trafalgar st, Lowestoft NR32 2AT UK ஐ வசிப்பிடமாகவும் கொண்ட அழகரட்ணம் சாள்ஸ் மனோகரன் அவர்கள் நேற்றுமுன்தினம் (07.03.2025) வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அழகரட்ணம் - தயாமணி தம்பதியின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான நல்லையா - மகேஸ்வரி தம்பதியின் அன்பு மருமகனும், குமரேஸ்வரி அவர்களின் பாசமிகு கணவரும், மாலதி (ஓய்வுபெற்ற ஆசிரியர் உரும்பிராய்/சைவத் தமிழ் வித்தியாலயம்), பிரபாகரன் (ஓய்வுபெற்ற ஆசிரியர் யா/சென்ஜோன்ஸ் கல்லூரி), சரளா (ஜேர்மனி), சாந்திகரன் (UK) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் தருமபாலன் ராஜேஸ்வரி (ஆத்தை), விஜயகுமாரன் (Canada), விஜயராசன் (UK) ஆகியோரின் மைத்துனர் , நிறோஜி (UK), நிலோஜி (UK) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிசாந்தன் (UK), பகிரதன் (UK) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஜெனுஸ் (UK), ஜெனுஸ்கா (UK), திவிஸ் (UK) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (22.03.2025) சனிக்கிழமை லண்டன் நேரப்படி காலை 8.30 மணியளவில் லண்டனில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் : குடும்பத்தினர்

மகள் - 0044 740 231 5096
சகோதரன் - 077 778 9735
சகோதரி - 077 869 1540

உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்

(CS/2692) J-1

## மரண அறிவித்தல்



### இராசலிங்கம் கேசவன்

**(வேலணை சரஸ்வதி வித்தியாலயம், யாழ் மத்திய கல்லூரி)**

வேலணையைப் பிறப்பிடமாகவும், U.K மற்றும் France இனை வதிவிடமாகவும் 2ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட இராசலிங்கம் கேசவன் அவர்கள் நேற்று முன்தினம் (20.03.2025) வியாழக்கிழமை அகால மரணமடைந்து இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசலிங்கம் (இளைப்பாறிய அதிபர்) மற்றும் - யோகேஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், சண்முகலிங்கம் ஆகியோரின் பெறாமகனும், இராஜேஸ்வரி, காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை ஆகியோரின் மருமகனும், செழியன் (Canada), மேகலா (PDHS Jaffna), Dr. நிரஞ்சன் (Colombo), முரளீதரன் (UK) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் Dr. சதாபானு ஜனகன் (UK), Eng. சுமூகன் (Australia) ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும், பத்மினி (Canada), Eng. மனோகரன், கலைச்செல்வி (Legal Draughtsmen Department) ஆகியோரின் மைத்துனரும் அஜீன் (St.Patrick's College), வசிகா (Jaffna Hindu Ladies college) ஆதிகேசன் (St.John's college) ஆகியோரின் அன்புத் தந்தையும், அபிநாத் (IIT Campus, Colombo), விபிசன் (பொறியியல் பீடம், UOM), கவின், ஸ்ரீஸ்கந்தன் (UK) ஆகியோரின் அன்பு மாமனாரும், துர்க்கா (Canda) அக்சயன், கவிநயா ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.03.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இல 6, 2ம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நண்பகல் 12.00 மணியளவில் வேலணை சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாயின் மடியில் 18.08.1976

இறைவன் அடியில் 20.03.2025

தகவல்: குடும்பத்தினர்

Dr. Niranjan - 077 363 8489
M.Megala - 076 668 8423

இல. 6, 2ம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்

(CS/2781A) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை புத்தூர் மீள்சுழற்சிக்குரிய திண்மக் கழிவுப் பொருட்களின் ஏலவிற்பனை

எமது சபையின் நீர்வேலியில் அமைந்துள்ள எமது திண்மக்கழிவு மீள்சுழற்சி நிலையத்தில் மீள்சுழற்சிக்குரிய கீழ்வரும் பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட உள்ளது.

**காலம் :- 28.03.2025 வெள்ளிக்கிழமை மு.ப 10.30 மணி**
**இடம் :- திண்மக் கழிவு மீள்சுழற்சி நிலையம், நீர்வேலி.**

01. தண்ணீர், சோடாபோத்தல் (நசுக்கப்பட்டது)
02. பொலித்தீன் கலவை
03. உரப்பைகள்
04. ரயர்கள்
05. பிளாஸ்ரிக் பொருட்கள்
06. விறகு
07. முள்ளுக்கம்பி
08. குடைக்கம்பி
09. நெற்வகை
10. தார் பரல்
11. தகரப்பேணி
12. தகரம்
13. பழைய ,ரும்பு
14. கண்ணாடி - கலர், வெள்ளை (உடைந்தது)
15. காட்போட்
16. சேதனப்பசளை

**நிபந்தனைகள்**

01. ஏலவிற்பனைதாரர் ஆள்அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் சமூகமளித்தல் வேண்டும்.
02. ஆர்வமுள்ள ஏலதாரரர்கள் மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 5000.00 இனையும் மீளளிக்க முடியாத படிவக் கட்டணமாக ரூபா 100.00 இனையும் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளல் வேண்டும். உரிய கட்டணங்கள் செலுத்தாதோர் ஏல விற்பனையில் பங்குபற்ற முடியாது.
03. அலுவலக வேலை நாட்களில் பொருட்களை காலை 9.00 மணி முதல் மாலை 2.00 மணி வரை நீர்வேலியில் அமைந்துள்ள திண்மக்கழிவு மீள்சுழற்சி நிலையத்தில். பார்வையிடலாம்.
04. மேலதிக விபரங்களுக்கு வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் நீர்வேலி உப அலுவலகத்தில் கடமை நேரங்களில் நேரடியாகவோ அல்லது 0212058973 எனும் அலுவலக தொலைபேசி ,லக்கத்திற்கு தொடர்பு கொண்டு தகவல்களைப் பெற முடியும்.

**செயலாளர்**
**வலிகாமம் கிழக்கு பிரதேசசபை,** 2025.03.22

(CR/44628) J-1

## நல்லூர் பிரதேச சபை - கொக்குவில் சபைக்குச் சொந்தமான கடைகளை 3வருட வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி கோரல் - 2025

சபைக்குச் சொந்தமான கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையில் விவரிக்கப்பட்ட கடைகளை 3வருட வாடகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கீழ் உள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக நல்லூர் பிரதேச சபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 24.03.2025ம் திகதி தொடக்கம் 08.04.2025 திகதி பி.ப 2.00 மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 09.04.2025ம் திகதி மு.ப 11.00 மணிவரை
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :- 09.04.2025ம் திகதி மு.ப 11.00 மணிக்கு
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் :- கலந்துரையாடல் மண்டபம். தலைமை அலுவலகம். நல்லூர் பிரதேச சபை.

| தொ. இல | கடை விபரம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் (VAT,NBT நீங்கலாக) | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் (VAT,NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 01 | திருநெல்வேலி சந்தை உட்புற கடை இல-N/23/02 | 334,800.00 | 100,000.00 | 2,000.00 |
| 02 | திருநெல்வேலி சந்தை உட்புற கடை இல-N/23/03 | 306,000.00 | 100,000.00 | 2,000.00 |

1. கேள்விப்பத்திரங்கள் இருபிரதிகளில் தயாரிக்கப்பட்டு, செயலாளர். நல்லூர் பிரதேச சபை. 14/5.கருவப்புலம் வீதி. கொக்குவில் கிழக்கு. கொக்குவில் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு. பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும்.
2. கேள்விப்பத்திரங்கள் மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும். மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணமும் செலுத்திப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களை பெறுபவர்கள் கோரிக்கைக் கடிதத்தினையும் தமது அடையாள அட்டையையும்.கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழையும் கொண்டு வருதல் வேண்டும்.
3. எந்தவொரு கேள்வியையும் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
4. ஏற்றுக்கொள்ளக் கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது.
5. கேள்விப்படிவத்தினை பெற்றுக்கொண்ட போதும் அவற்றை கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் காலத்திற்குள் சமர்ப்பிக்காத விடத்து கேள்விவைப்புப் பணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது.
6. கேள்வி திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
7. தெரிவு செய்யப்படும் குத்தகைகாரர் தாங்கள் சமர்ப்பித்த கேள்வித்தொகை மற்றும் ஒப்பந்த நிபந்தனைகளிற்கும் முழுக்குத்தகை காலத்திற்கும் (3 வருடம் முழுவதும்) நடாத்துதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இடை விலக முடியாது.
8. தெரிவு செய்யப்படும் குத்தகைகாரர் தாங்கள் சமர்ப்பித்த கேள்வித்தொகையின் 1/3 பங்கு பணத்தினை அறிவித்தல் கிடைத்து நாட்களுக்குள் காசாக செலுத்தி (அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்படும் மேலதிக வரிகள் உட்பட) சபையுடன் உடன்படிக்கை செய்து கொள்ளல் வேண்டும்.
9. தங்களால் செலுத்தப்படும் கேள்வித்தொகை எக்காரணம் கொண்டும் தங்களிற்கு மீளளிக்கப்படமாட்டாது.
10. தங்களது கேள்வித்தொகைக்கு மேலதிகமாக பாதுகாப்பு வைப்புப்பணமாக ரூபா500.000.00.னை செலுத்த வேண்டும்.அத்துடன் கடைத்தொகுயில் சேதம் எவையேனும் ஏற்படுத்தப்படுமிடத்து தங்களது ஒப்பந்தம் முடிவடையும் காலப்பகுதியில் தங்களது பாதுகாப்பு வைப்புப் பணத்திலிருந்து குறித்த சேதங்களுக்கான செலவீனம் கழிக்கப்பட்டு மிகுதிப்பணமே மீளளிக்கப்படும். கடைத்தொகுதியில் புதிய மின்னிணைப்புக்களோ அல்லது அமைப்பினை மாற்றி அமைக்கும் வேலைகளே மேற்கொள்வதெனில் சபையின் அனுமதியினைப்பெற்றே மேற்கொள்ள வேண்டும்.
11. தங்களால் நடத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை சபையால் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும்.
12. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிமக் கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமச் சான்றிதழினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
13. திருநெல்வேலி சந்தையிலும். திருநெல்வேலிச்சந்தைக் கடைத்தொகுதிகளிலும் நல்லூர் பிரதேச சபைக்கு சொந்தமான கடைகளை குத்தகைக்கு பெற்று நடாத்தி வருபவர்கள் மேற்படி கடைகளுக்கான கேள்வியில் கேள்விதாரராக பங்குபற்றமுடியாது.
14. சித்திகர வாடகை உடன்படிக்கையாளர் நல்லூஉ பிரதேச சபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு இணங்க நடந்து கொள்ள வேண்டும்.
15. கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**செயலாளர்**
**நல்லூர் பிரதேச சபை** 22.03.2025

(CR/44629) J-1

## சகல தரப்புகளின் வழிகாட்டலுடனேயே
# வீதி அபிவிருத்திப்பணிகள்
### யாழ்.மாவட்ட பதில் செயலர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 22

வீதிப் புனரமைப்புப் பணிகளில் ஈடுபடும் திணைக்களங்கள் ஏனைய தரப்பினரின் ஆலோசனை வழிகாட்டல்களைப் பெற்று ஒருங்கிணைந்த வகையில் நடைமுறைப்படுத்தவேண்டும். இதனூடாக சிறந்த வீதிப்புனரமைப்பின் பொறிமுறையை உறுதிசெய்யலாம் என்று யாழ்.மாவட்ட பதில் செயலர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளது.

கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் நேற்று வெள்ளிக்கிழமை யாழ்.மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வீதிப்புனரமைப்புப் பணிகளில் ஈடுபடும் திணைக்களத்துடன் இணைந்த வகையில் கமநலசேவைகள் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம் போன்ற ஏனைய தொடர்புடைய திணைக்களங்களின் ஆலோசனைகளையும் பெற்று ஒருங்கிணைந்த வகையில் நடைமுறைப்படுத்தவேண்டும். அனைவரினதும் ஆலோசனைகளைப் பெற்றுக் கூட்டுப்பொறுப்புடன் இனிவரும் காலங்களில் வீதிப்புனரமைப்பு வேலைகளை நிறைவேற்ற வேண்டும்.



அரசாங்கமானது வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக வடமாகாணத்தின் வீதிகளைப் புனரமைப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதற்கமைய யாழ்.மாவட்டத்தின் வீதிகளையும் புனரமைப்பதற்கு நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய புனரமைக்கப்பட வேண்டிய அனைத்துத் தர வீதிகளின் விவரங்களை வீதிகளுக்குரிய வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் உள்ளூராட்சிசபைகளுடன் இணைந்த வகையில் சரியான முறையில் தயாரித்து பிரதேச செயலாளர்கள் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-66)




## இலக்கணப்பிழையேதுமின்றி
# ஏ.ஐ. தொழில்நுட்பத்தில் இத்தாலியில் நாளிதழ்

உரோம், மார்ச் 22

இத்தாலியில் இருந்து வெளியாகும் இல் போக்லியோ, நாளிதழ் நிறுவனம் முழுவதும் செயற்கை நுண்ணறிவுத் (ஏ.ஐ.) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தயாரான நாளிதழை விற்பனைக்குக் கொண்டுவந்துள்ளது.

இதுகுறித்து நாளிதழின் ஆசிரியர் கூறுகையில்,

இந்த 4 பக்க நாளிதழில் தலைப்புகள், செய்திகள், தொகுப்புகள், எழுத்துகள் என அனைத்தும் ஏ.ஐ. தொழில்நுட்பத்தில் மட்டுமே உருவாக்கப்பட்டன. செய்தியாளர்கள் தாங்கள் சேகரித்த செய்தியை சொன்னால் மட்டும் போதும், மற்றதையெல்லாம் அது பார்த்துக்கொள்ளும். முதற் பக்கத்தில் ரஷ்ய அதிபர் புடினும், 10 துரோகங்களும் எனத் தலைப்பிட்டும் ட்ரம்ப்பைக் கிண்டலடித்தும் தலைப்புகளை இட்டு ஏ.ஐ. சுவாரசியப்படுத்தி யுள்ளது.

இதில் ஆச்சரியம் என்னவெனில், செய்தித்தாள் முழுவதிலும் ஒரு இலக்கணப் பிழை கூட இல்லை என்பதுதான். அதே வேளை கணினித் துறை மட்டுமின்றி கல்வி, மருத்துவம், இராணுவம் என எல்லாத் துறைகளிலும் ஏ.ஐ. பயன்பாடு அதிகரித்துவருகிறமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## பேரின்பராணி தவரத்தினம்



எழுதுமட்டுவாழைப் பிறப்பிடமாகவும், அரசடி வீதி இருபாலை, மார்க்கம் - கனடா ஆகிய இடங்களை வதிவிடமாகவம் கொண்ட பேரின்பராணி தவரத்தினம் கடந்த 12.03.2025 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - பாறிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சின்னத்தங்கம் தம்பதியரின் பாசமிகு மருமகளும், தவரத்தினம் (ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்) அவர்களின் பாசமிகு மனைவியும், பிரபாஜினி, மகசங்கர் ஆகியோரின் பாசமிகு தாயாரும், டாக்டர் மயிலாஷன், துஸ்யா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், விஸ்வாதிஹா, வினுஸாரா, பொற்சாயிஹா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற இராசம்மா (UK) மற்றும் சரஸ்வதி, தம்பையா, கனகமணி (Swiss), செல்வரத்தினம் (UK), சிவராசா (France) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான தியாகராசா, சந்திரசேகரம் மற்றும் சாந்தினி, இலங்கைநாதன் (Swiss), உமாதேவி (UK), மதிவதனி (France) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், ரவீந்திரன் (France), ரதிகரன் (UK), கேதீஸ்வரன் (UK), குகனேஸ்வரன் (UK), சித்திரேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சிறியதாயும், திலீபன் (Swiss), தீபிகா (Swiss) ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும், கஜனி (Canada), ஜனகன், சயந்தன் (Canada), டயானி (UK), டிலானி (UK), டனுஷன் (UK), நிவேதா (France), சுவேதா (France), நிவேதன் (France) ஆகியோரின் பாசமிகு அத்தையும், கந்தையா - தங்கம்மா, காலஞ்சென்ற சுப்பிரமணியம் - மனோன்மணி ஆகியோரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்றவர்களான வீரகத்தி - வள்ளிப்பிள்ளை அவர்களின் பெறாமகளும், மயில்வாகனம் - ஜெயலட்சுமி, பாஸ்கரன் - மகாலட்சுமி ஆகியோரின் பாசமிகு சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 22.03.2025 சனிக்கிழமை 5.00 p.m - 9.00 p.m, 23.03.2025 ஞாயிற்றுக்கிழமை 8.00 a.m - 9.00 a.m, Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Avenue, Markham, Ontario L3R5G1 என்னும் இடத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு 23.03.2025 9.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, 11.30 மணியளவில் Highland Hills Crematorium 2 Stalwart Industrial Drive, Gormley என்னும் இடத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

**தகவல்:**

| | |
|---|---|
| தவரத்தினம் (கணவர்) | : + 947 4099 6344 (WhatsApp) |
| மகசங்கர் (மகன்) | : +1416 896 0069, +9477 911 6209 (WhatsApp) |
| சித்திரேஸ்வரன் (பெறாமகன்) | : + 94779451265 |
| பிரபாஜினி (மகள்) | |
| Dr. மயிலாஷன் (மருமகன்) | |

மலர்வு 07.02.1951 உதிர்வு 12.05.2025

# மரண அறிவித்தல்

## திருமதி தேவராசா நாகேஸ்வரி



வண்ணார் பண்ணையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தேவராசா நாகேஸ்வரி அவர்கள் கடந்த 19.03.2025 புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துவேலு - தங்கமுத்து தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லையா - கனகம்மா தம்பதியின் அன்பு மருமகளும், தேவராசா (காலி ஆனந்தம், ஆனந்தா ஸ்ரோர்ஸ், காலி) அவர்களின் அன்பு மனைவியும், Dr.லிங்கநாதன், வினோத், சுகந்தன், கங்கா ஆகியோரின் அன்புத் தாயாரும், நளாயினி, சிந்துஜா, செந்துஜா ஆகியோரின் அன்பு மாமியாரும், கஸ்தூரி, லக்ஸ்மன், அக்சயன், அகிஷன், தாரணா, ஹம்சிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான நாகராசா, கமலாதேவி, தனலட்சுமி மற்றும் தியாகராசா, வசந்தாதேவி, விமலாதேவி, வரதராஜா, சற்குணராசா, செல்வராசா, சந்தானலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான சிவபாதசுந்தரம், நடராசா, இராசலிங்கம், ஜெயராஜா மற்றும் சகுந்தலாதேவி, தயாநிதி, திலகவதி, கமலநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கோசலாதேவி, ஞானகலாவதி, ஜெயவதி, சிவபதி, தயாநாதன், தயாவதி, பிறேமாவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான மகாலிங்கம், ஜெயக்குமார், மற்றும் தவயோகராசா, இராசயோகம், விஜேந்திரன், ஜெயகாந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.03.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
குடும்பத்தினர்
077 999 8134

தாயின் மடியில் 21.06.1942 இறைவன் அடியில் 19.03.2025

வண்ணார்பண்ணை

(CS/2785) J-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தவறான முடிவெடுத்து இளைஞரொருவர் பலி

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ்ப்பாணம் அளவெட்டிப் பகுதியில் தவறான முடிவெடுத்து 35 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உறவினர்களுக்கு இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாகவே தவறான முடிவெடுத்து உயிரிழந்திருக்கலாம் என்று முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-27)

## தவறான முடிவெடுத்து இளம்தாய் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ்ப்பாணம் - கட்டுடைப் பகுதியில் இளம் தாயொருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

குடும்பத் தகராறு காரணமாகவே அவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்திருக்கலாம் என்று முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-27)



## ஐ.பி.எல். தொடர் இன்று ஆரம்பம்!

புதுடெல்லி, மார்ச் 22

18ஆவது ஐ.பி.எல். தொடர் இன்று கோலாகலமாக ஆரம்பமாகவுள்ளது.

மொத்தம் 10 அணிகள் இந்தத் தொடரில் பங்கேற்க உள்ளன. முதலாவது ஆட்டம் கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெறவுள்ளது. இன்றைய ஆட்டத்தில் நடப்புச் சம்பியன் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் மற்றும் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிகள் மோதவுள்ளன. (ம-இ)


## மருதடி விநாயகருக்கு இன்று கொடியேற்றம்

தமிழ்வேந்தர் காலத்துத் திருத்தலங்களிலொன்றாகப் போற்றப்படும் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் இன்று சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 தினங்கள் இடம்பெறவுள்ளது. புதுவருடப்பிறப்பு தினமான அடுத்த மாதம் 14 ஆம் திகதி திங்கட்கிழமை இரதோற்சவம் இடம்பெறும். மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

## மகளிர்தினமும் கௌரவிப்பும்

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழிசைக் கல்வித்தடாகம் நடத்தும் மகளிர்தின நிகழ்வும் கௌரவிப்பும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சுன்னாகம் பொது நூலகத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக சுன்னாகம் வலி. தெற்குப் பிரதேசசபையின் செயலாளர் அழகேஸ்வரன் பிரதீபன் பங்கேற்கவுள்ளார். (ச-41)



## ஸ்ரீலங்கா விமானப்படையின் விமானம் வீழ்ந்து விபத்து

கொழும்பு, மார்ச் 22

ஸ்ரீலங்கா விமானப்படையின் விமானமொன்று நேற்று விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

கட்டுநாயக்க விமானப்படை தளத்தில் இருந்து புறப்பட்ட ஸ்ரீலங்கா விமானப்படையின் 'இலக்கம் 5' தாக்குதல் படைப் பிரிவுக்குச் சொந்தமான விமானமே குருநாகல் பகுதியில் வீழ்ந்து விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

விமானத்தில் இருந்த இரண்டு விமானிகளும் பரசூட் மூலம் குதித்துத் தப்பித்ததால் உயிரிழப்புக்கள் எதுவும் பதிவாகவில்லை. இந்த விமான விபத்துத் தொடர்பில் விசாரிப்பதற்காக விமானப்படைத் தளபதியால் சிறப்புக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. (ம-இ)

### காணிப்...

யாடல் கிளிநொச்சியில் அமைந்துள்ள வடக்கு மாகாணக் காணி ஆணையாளர் அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதன்போதே ஆளுநர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாணக் காணி ஆணையாளர் சோதிநாதன், கிளிநொச்சி மாவட்டச் செயலர், யாழ்.மாவட்ட மேலதிக செயலர் (காணி) க.சிறிமோகன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (அ-ம-66-113)

### பலாலிப்...

விசாரணைகளை முன்னெடுத்துள்ளது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட எட்டுப் பேரால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய காரியாலயத்தில் பலாலிப் பொலிஸாருக்கு எதிராக முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டிருந்தது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமைக் காரியாலயத்தால் குறித்த முறைப்பாட்டுக் கோவைகள் யாழ்ப்பாணப் பிராந்தியக் காரியாலயத்திலிருந்து கையேற்கப்பட்டிருந்தன. எனினும், அந்த முறைப்பாடுகளின் மீது ஒன்றரை ஆண்டுகளாக விசாரணைகள் எதுவும் இடம்பெறவில்லை. இவ்வாறான பின்னணியிலேயே, நேற்று முதல்முறையாக அந்த முறைப்பாடுகள் மீது விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மேலதிக எழுத்துமூலச் சமர்ப்பணங்களுக்காக எதிர்வரும் மே மாதம் 15ஆம் திகதிக்கு குறித்த முறைப்பாடு தவணையிடப்பட்டுள்ளது. இதன்போது பாதிக்கப்பட்ட முறைப்பாட்டாளர்கள் வீடியோ உள்ளிட்ட தமது தரப்பு ஆவணங்களைச் சமர்ப்பிக்கமுடியுமென மனித உரிமை ஆணைக்குழுவினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவால், தமது முறைப்பாடுகள் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று நாடாளுமன்றத்தில் வைத்து அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுட்டிக்காட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-66-26)

### போதைக்கு...

அடிமையான அந்த இளைஞர், தனது வீட்டாருடன் முரண்பட்டுவந்துள்ளார். இதையடுத்து, வீட்டார் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியதைத் தொடர்ந்தே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இளைஞரிடம் இருந்து பெறப்பட்ட மாதிரிகளைச் சோதனைக்கு உட்படுத்தியதில் அவர் ஐஸ் மற்றும் கஞ்சாவுக்கு அடிமையானவர் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (அ-ம-26)

### தேகாந்த...

சுபீனா குணரத்தினத்துக்கு தேகாந்த நிலையில் கலைமாணிப் பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 39ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் மூன்றாம் நாள் அமர்வு நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதன்போது சுபீனா குணரத்தினம் என்ற மாணவி கலைமாணிப் பட்டத்துக்கு உரித்துடையவராக்கப்பட்டமையை உறுதிப்படுத்தி, தேகாந்த நிலையில் அவரது பட்டம் பெற்றோரிடம் கையளிக்கப்பட்டது.

தாயும், தந்தையும் கண்ணீருடன் தமது மகளின் பட்டத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறி சற்குணராஜாவிடம் பெற்றுச் சென்றனர். (அ-ம-66)

### தவறான...

தனக்குத் தானே மண்ணெண்ணெய் ஊற்றி தீவைத்த அவர், தீவிரமான காயங்களுக்கு ஆட்பட்டிருந்தார். இதையடுத்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர், சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் மரண விசாரணை அதிகாரி பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

முதலாம் ஆண்டு நீங்காத நினைவுகள்

தோற்றம் 02 - 05 - 1959



மறைவு 01 - 04 - 2024

கடந்த 01.04.2024 அன்று இறைவனடி சேர்ந்த எனது அன்பு மனைவி

அமரர் திருமதி குகராசா மனோகரதேவி

விழிகளும் உன்னைத் தேட விடியல் பல தனித்தோட
வழிகளும் ஏதும் உண்டோ வையகம் நீ மீண்டும் காண...
ஆண்டு ஒன்று போகும் அகிலமும் உருண்டு போகும்
ஆயினும் உந்தன் அன்பு அகலுமா நெஞ்சை விட்டு
என்றென்றும் எங்களுடன் இணைந்திடுவீர் என
எண்ணிலா கனவுகள் கொண்டிருக்க
இடையில் காலன் பிரித்ததேனோ
விழிநீர் பூக்களால் உன் பாதம் தான் நனைத்து
விடியலை வேண்டுகின்றோம்.
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

சிவகுரு வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

க.குகராசா (கணவர்) மற்றும்
[illegible]
021 222 0701

(CS/2783) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேதினத்தில்..:

அரசியற்கட்சிகள் பயன்படுத்தவுள்ளன. உள்ளூராட்சிசபைத் தேர்தல் மே 6ஆம் திகதி நடைபெறவுள்ளது. மே 3ஆம் திகதி நள்ளிரவுடன் பரப்புரைகள் முடிவுக்கு வரும். வழமையாக இறுதிப் பரப்புரைக் கூட்டத்தை பிரதான கட்சிகள் பிரமாண்ட மாக நடத்துவது வழமை. கட்சித் தலைமை உட்பட கட்சியின் பிரதான பேச்சாளர்கள் அவற்றில் பங்கேற்பார்கள்.

இம்முறை தேர்தலுக்கு முன்னர் மே தினம் வருவதால் அதனை பிரதான பரப்புரைக் கூட்டமாக கட்சிகள் பயன்படுத்தக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கமைய மேதினக் கூட்டங்களையும், பேரணிகளையும் பிரமாண்டமாக நடத்துவதற்கு கட்சிகள் திட்டமிட்டுள்ளன என்றும் அறியமுடிகின்றது. (அ-ம-44)

## 114 மேலதிக...

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் தொடர்பான வாக்கெடுப்பு நேற்று இரவு 7.40 மணியளவில் நடைபெற்றது. இதற்கு ஆதரவாக 159 வாக்குகளும், எதிராக 45 வாக்குகளும் அளிக்கப்பட்டன. இதற்கமைய 2025ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் 114 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

2025ஆம் நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு அல்லது 'வரவு - செலவுத்திட்ட உரை' நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் கடந்த 17ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பெப்ரவரி 18ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை 7 நாள்கள் ஒதுக்கீட்டுச் சட்டமூலம் மீதான இரண்டாவது மதிப்பீட்டு விவாதம் இடம்பெற்றது. இரண்டாவது மதிப்பீடு 109 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. இதன் பின்னர் பெப்ரவரி 27ஆம் திகதி முதல் நேற்று மார்ச் 21ஆம் திகதி வரை ஒதுக்கீட்டு சட்டமூலம் மீதான குழுநிலை விவாதம் இடம்பெற்றது. இதைத் தொடர்ந்தே பட்ஜெட் நிறைவேற்றப்பட்டது. இரண்டாவது வாக்கெடுப்பின்போது ஆதரவாக வாக்களித்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நேற்று வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

**பட்ஜெட்டின் மதிப்பீடுகள்**

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசின் 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் மொத்த செலவீனமாக 4 ஆயிரத்து 616 பில்லியன் ரூபா மதிப்பிடப்பட்டுள்ளது.

2025ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கே கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 713 பில்லியன் ரூபா மேற்படி அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சுக்கு 442 பில்லியன் ரூபாவும், சுகாதாரம் மற்றும் ஊடகத்துறை அமைச்சுக்கு 507 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சுக்கு 473.4 பில்லியன் ரூபாவும், சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சுக்கு 406 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சுக்கு 399.16 பில்லியன் ரூபாவும், பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளாட்சி அமைச்சுக்கு 496 பில்லியன் ரூபாவும், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சுக்கு 271 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சுக்கு 175 பில்லியன் ரூபாவும், நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சுக்கு 54 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சுக்கு 207 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில் பாதீட்டுப் பற்றாக்குறையாக 2 ஆயிரத்து 200 பில்லியன் ரூபா மதிப்பிடப்பட்டுள்ளது. மானியங்கள் உட்பட 2025ஆம் ஆண்டிற்கான வருமானமாக 4 ஆயிரத்து 990 பில்லியன் ரூபாவும், மொத்த செலவீனமாக 7 ஆயிரத்து 190 பில்லியன் ரூபாவும் மதிப்பிடப்பட்டுள்ளது. (அ-ம-44)

## நாட்டைப்...

எதிர்க்கட்சிகளின் பொய்களை மக்கள் நம்பும் காலம் இதுவல்ல என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே ஜனாதிபதி அநுர இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த டிசெம்பர் மாதம் முதலாம் திகதியே வங்குரோத்து நிலையிலிருந்து அதிகாரப்பூர்வமாக மீண்டோம். இதனையடுத்தே நிறுத்தப்பட்டிருந்த வேலைத்திட்டங்களை மீள ஆரம்பிப்பதற்கு ஜப்பான் நடவடிக்கை எடுத்தது. சீனாவின் 76 வேலைத்திட்டங்களையும் ஆரம்பிப்பதற்கு இணக்கம் எட்டப்பட்டது. அதே போல இந்தியப் பிரதமரின் வருகையின் பின்னர் சம்பூர் திட்டம் ஆரம்பமாகும். நாட்டில் உறுதித்தன்மையை ஏற்படுத்துவதற்குரிய சமிக்ஞைகளை வெளிப்படுத்தியதால்தான் இதுவெல்லாம் நடக்கின்றது.

எமது பொருளாதாரக் கொள்கைகள் மீது முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கை வரவேண்டும். எனவே, பொருளாதார உறுதித்தன்மையை ஏற்படுத்தவேண்டும். எதிரணிகளுக்கு கருத்துக்களை முன்வைப்பதற்கும், அரசியல் செய்வதற்கும் உரிமை உள்ளது. அதற்காக பொருளாதாரத்தைச் சீரழிக்கும் வகையில் பொய்யுரைக்கக்கூடாது. விமர்சனங்களை முன்வையுங்கள். ஆனால் போலியான தகவல்களை வெளியிடவேண்டாம். அவ்வாறு வெளியிடப்படும் தகவல்களால் பங்குச்சந்தையில் தாக்கம் ஏற்படக்கூடும். முதலீட்டாளர்கள் அச்சமடையக்கூடும். எனவே, வீழ்ந்துள்ள பொருளாதாரத்தை மீட்கும் பயணத்தின்போது ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால் எம்முடன் பேச்சு நடத்துங்கள். கேளுங்கள், நாம் தெளிவுபடுத்துகின்றோம். அதைவிடுத்து நெருக்கடியான சூழ்நிலைகளில் பொய்யுரைக்கக்கக்கூடாது.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குரிய ஓய்வூதியம் இல்லாது செய்யப்படும். அதற்குரிய சட்டமூலம் விரைவில் வரும். 10 இலட்சமாக உள்ள எம்.பி.க்களுக்குரிய காப்புறுதியை இரண்டரை இலட்சமாகக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தீர்வையற்ற வாகன அனுமதிகள் வழங்கப்படமாட்டாது.

தேசிய மக்கள் சக்தியின் பயணத்தைவிடவும் சிறப்பானதொரு மாற்றுப் பயணம் இருந்தால் சொல்லுங்கள், இல்லை. எனவே, எமது பயணத்துக்கு எதிரணிகள் ஆசீர்வாதம் வழங்குவதைத்தவிர வேறு வழியில்லை. ஊடகக் கண்காட்சிமூலம் அரசியல் நடத்தலாம் என நினைத்த காலம் மலையேறிவிட்டது. எமது நாட்டில் புதியதொரு அரசியல் கலாசாரத்தை நாம் உருவாக்கிவிட்டோம்' - என்றார். (அ-ம-44)

## 35 மாணவர்கள்...

குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுக்கூட்டம் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

இதன்படி, மருதங்கேணிப் பிரதேசத்தில் ஒரு மாணவரும், கரவெட்டிப் பிரதேசத்தில் 3 மாணவர்களும், பருத்தித்துறைப் பிரதேசத்தில் 5 மாணவர்களும், கோப்பாய் பிரதேசத்தில் ஒரு மாணவரும், தெல்லிப்பழைப் பிரதேசத்தில் 10 மாணவர்களும், சாவகச்சேரிப் பிரதேசத்தில் 2 மாணவர்களும், சங்கானைப் பிரதேசத்தில் 3 மாணவர்களும், உடுவில் பிரதேசத்தில் 3 மாணவர்களும், யாழ்ப்பாணப் பிரதேசத்தில் 4 மாணவர்களும், நல்லூர்ப் பிரதேசத்தில் 3 மாணவர்களும், சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 4 மாணவர்களுமென மொத்தமாக 42 மாணவர்கள் இடைவிலகியிருந்தனர். அவர்களில், 35 மாணவர்கள் மீளவும் இணைக்கப்பட்டுள்ளனர். (அ-ம-125)

## கடலில்...

(வயது - 20) என்ற இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இணுவில் பகுதியைச் சேர்ந்த இளைஞர் குழுவொன்று, சமைத்துச் சாப்பிட்டு பொழுதைப் போக்குவதற்காக மாதகல் கடற்பகுதிக்கு நேற்று வெள்ளிக்கிழமை சென்றுள்ளது. அவர்கள் கடலில் நீராடிக் கொண்டிருந்தபோது நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் அந்த இளைஞர் காணாமற்போயுள்ளார். இதையடுத்து, பொலிஸாரும் பொதுமக்களும் இணைந்து தேடுதல் நடத்திய நிலையில் மாலை 5.30 மணியளவில் அந்த இளைஞர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம-125-26-66-100-27)

## 37 சிறுவர்கள்...

பாலியல் துஷ்பிரயோகம், இளவயதுக் கர்ப்பம், உடல்ரீதியான தண்டனை, உளரீதியான துஷ்பிரயோகம், மருத்துவப் புறக்கணிப்பு, தாயாரால் கைவிடப்பட்டமை, பிறழ்வு நடத்தை, தாயாரால் கடத்தப்பட்டமை, தற்கொலை முயற்சி உள்ளிட்ட வகையான துஷ்பிரயோகங்களே இவ்வாறு மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம-125)

## பிரபாகரனின்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'30 வருட போரால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மக்களாக வடக்குக் கிழக்கு மக்கள் காணப்படுகின்றனர். எமது மக்கள் அனைத்தையும் இழந்துள்ளனர். முறையான அபிவிருத்திகள் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. இந்த நிலையை நாம் மாற்றியமைத்துள்ளோம். எமது ஆட்சியின்கீழ் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

கிராமங்களை நோக்கி நிதி பாய்ச்சப்பட்டு வருகின்றது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்தி தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

கே.கே.எஸ். பகுதியில் நவீன வசதிகளுடன் தொழில் வலயமொன்று உருவாக்கப்படும். அதேபோல முல்லைத்தீவு மாவட்டத்துக்கு இருபதுக்கும் அதிகமான புதிய முதலீட்டாளர்கள் வந்துள்ளனர். முல்லைத்தீவு மாவட்டம் கட்டியெழுப்படும் என்ற உத்தரவாதத்தை அவர்கள் வழங்கியுள்ளனர்.

பருத்தித்துறையில் இருக்கின்ற கரையோர வீதியை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். வல்வெட்டித்துறையில் இதுவரையில் எவரும் கைவைக்கவில்லை. ஏனெனில் அந்தப் பகுதி பிரபாகரன் பிறந்த ஊராகும். ஆனால் இம்முறை பெருந்தெருக்கள் அமைச்சின்கீழ் அந்த வீதியைப் புனரமைப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இப்படி நாம் வேலைசெய்யும்போது ஒரு சில தமிழ் அரசியல்வாதிகள் ஊளையிட ஆரம்பித்துள்ளனர். இந்த ஊளைகளுக்கு அஞ்சி நாம் ஓடிஒளியமாட்டோம். ஏனெனில் மக்கள் ஆணை எமக்கு உள்ளது. யாழ். மாவட்டத்தில் எந்தவொரு சபையிலும் எமது கட்சியின் வேட்புமனு நிராகரிக்கப்படவில்லை. இம்முறையும் யாழில் வெற்றிக்கொடியை நாட்டுவோம்' - என்றார். (அ-ம-44)

## பிரபாகரனை...

வந்திருப்பதை வாழ்த்துகின்றோம் என்று தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய மக்கள் சக்தியின் வேட்புமனுக்கள் மட்டுமல்ல வடக்கு, கிழக்கில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வேட்புமனுக்களும் நிராகரிக்கப்படவில்லை. மன்னாரில் மட்டும் ஒரு வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளது. அதுதொடர்பில் நீதிமன்றத்தை நாடவுள்ளோம். யாழ். மாவட்டத்தில் அனைத்து வேட்புமனுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. எல்லாச் சபைகளிலும் நாம் ஆட்சியமைப்போம்.

தலைவர் பிரபாகரனின் பெயரைக்கூட உச்சரிக்கும் அளவுக்கு அரசாங்கம் வந்திருப்பதை வாழ்த்துகின்றோம். தேர்தலில் வெல்லவேண்டும் என்பதற்காக அவரின் ஊரைப் பற்றியும் பேசுகின்றீர்கள். ஆனால் உங்களின் செயற்பாடுகள் ஆக்கபூர்வமானவையாக இல்லை. ஆறு மாதகாலமாகியும் வடக்கு, கிழக்கில் எதுவும் நடக்கவில்லை. இதனை தமிழ் மக்கள் உணர்ந்துவிட்டார்கள். பட்டலந்த அறிக்கை பற்றி பேசுகின்றீர்கள், தமிழ் மக்கள் கொல்லப்பட்டமை தொடர்பில் கதைக்கப்படுவதில்லை - என்றார். (அ-ம-44)

## ஐஸ்...

செய்யப்பட்டுள்ளார். திருகோணமலையில் இருந்து வந்த 25 வயதான பெண்ணே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து ஐஸ் போதைப்பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. நீதிமன்ற உத்தரவுக்கு அமைய எதிர்வரும் 4ஆம் திகதி வரை அந்தப் பெண் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 40 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- Whatsapp:- **0044 740 537 3526**

(CS/57780) J-1

## கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு

இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாமிலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட கொங்கிறீற் மிக்சர் (Concrete Mixer) மற்றும் இத்தாலியில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட மின்னுயர்த்தியும் (Hoist) இப்பொழுது எம்மிடம்.

**குறிப்பு:** இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாம் கொங்கிறீற் மிக்சர் (Original) வடபகுதியில் எம்மிடம் மட்டுமே. போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.

"நாங்கள் உங்களோடு"



### ஆர்க் .என். கம்பனி

- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

Hotline: 071 535 7799 / 071 535 7803

## காணி விற்பனைக்கு

பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தைக்கு அருகாமையில் அமைந்துள்ள பலாலி வீதியிலிருந்து 40m தொலைவில் HNB வங்கிக்கும் Sunway Supermarket க்கும் மிக அருகில்

- வெட்டுக்கிணறு
- சுற்றுமதிலுடன் கூடிய
- ஒரு குடும்பம் வசிக்கக்கூடிய வீட்டுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

விலை பேசி தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு:-

**077 774 2681, 077 690 1708**

(CS/29898) J-1

## மணமகள் தேவை

யாழ். இந்து (V), 1988 ம் ஆண்டு பிறந்த சுவாதி நட்சத்தி 4ம் பாத கிரக பாவம் 20, செவ்வாய் 3 இல் UK இல் Citizenship கொண்ட பொறியியலாளராக கடமையாற்றும் மணமகனுக்கு பொருத்தமான மணமகள் விரும்பத்தக்கது.

பென்சுளானந்தா திருமண சேவை.

Whatsapp:- **+94 769 738 962**

## விஷ்டம்

### தொழினுட்பக் கல்லூரி

இல 63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்.

**A/L 2027 தொழினுட்பப் பிரிவு**

**புதிய வகுப்புக்கள் ஆரம்பம்**

29.03.2025

வெளி மாவட்ட மாணவர்களுக்கு விஷேட நேர சூசி ஒழுங்கு செய்து தரப்படும்.

செய்முறை கற்பித்தலுக்கான அனைத்து வசதிகளும் கொண்ட வடக்கின் தனித்துவமான முதல்தர தனியார் கல்வி நிறுவனம்

தொடர்புகளுக்கு- **077 248 7774/076 552 9093**

(CS/44628) J-1

## பெண் பராமரிப்பாளர் தேவை

திருநெல்வேலியில் அமைந்துள்ள பெண்கள் சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்து பணியாற்றக்கூடிய பெண் பராமரிப்பாளர் தேவை.

வயதெல்லை இருபத்தைந்து வயதைப்பூர்த்தியடைந்தவர்கள் நாற்பத்தைந்து வயதிற்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

தகைமை : க.பொ.த (உ /த) பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அல்லது சிறுவர் பராமரிப்பு தொடர்பான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

முகாமையாளர் தொடர்பு:- 021 222 8490, 077 903 8542, 077 361 1301

(cs 57783) (N-1)

## கலைஞர்கள் ஒன்றுகூடல்

தென்மராட்சிப் பிரதேச செயலகக் கலைஞர்களின் ஒன்றுகூடல் நிகழ்வு சாவகச்சேரி சிவன்கோவில் வீதியிலுள்ள தென்மராட்சிக் கலைமன்ற கலாசார மண்டபத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணிக்கு நடைபெறவுள்ளது. மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பண்பாட்டு அபிவிருத்திச் செயற்றிட்டத்தின்கீழ் பிரதேச செயலகமும் கலாசாரப் பேரவையும் ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்வில் பிரதேசக் கலைஞர்களை கலந்து கொள்ளுமாறு பிரதேச கலாசாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (ச-25,9)

## காசாளர் தேவை

K.K.S வீதி, இணுவிலில் இயங்கும் உணவகத்திற்கு பெண் காசாளர் தேவை. (40 வயதிற்கு உட்பட்டவர்) சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

வேலை நேரம் : 9am - 6pm

**077 104 1923**

## அறை வாடகைக்குத் தேவை

யாழ் வைத்திய சாலையில் பணியாற்றும் பெண் வைத்தியருக்கு பாதுகாப்புடன் கூடிய அறை 6 மாதங்களுக்கு வாடகைக்குத் தேவை. வைத்திய சாலையில் இருந்து நடை தூரத்தில் விரும்பத்தக்கது.

**077 078 4411, 075 078 4466**

## காணி விற்பனைக்கு

55 New செம்மணி வீதி கல்வியங்காட்டில் 2 1/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

(கிணற்றுடன்) - tube well, நல்லூர் கோவில் 1.7 Km, கல்வியங்காடு சந்தி 350 m

**077 185 4870**

(cs 57792) (N-1)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் உரும்பிராய் பகுதியில் 28 பரப்பு காணி விற்பனைக்குண்டு**

**நிலப்பரப்பு**

- பலாலி வீதியில் இருந்து 150 மீற்றர் தூரம்
- 20 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது
- உரும்பிராய் பெற்றோல் செற் முன் வீதியில் உள்ளது
- கட்டுக் கிணற்றுடன் சிறிய வீடும் உள்ளது
- பயன் தரும் தென்னைகள் உள்ளன
- நல்ல சுற்று சூழல் குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- ஒரு பரப்பின் விலை 64 லட்சம்
- தரகர் தேவையில்லை
- பார்வையிடும் நேரம்: காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை


தொடர்புகளுக்கு: **ஜெயம்**

**077 814 7389**

**077 986 5457**

## மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 10 . 1945



மறைவு 20 . 03 . 2025

### குமரேசன் விசுவலிங்கம் (பெரியண்ணை)

**(உரிமையாளர், வேலவன் அங்காடி, சங்கத்தானை, ஓய்வுபெற்ற மலேரியா தடுப்பு உத்தியோகத்தர்)**

கைதடியைப் பிறப்பிடமாகவும், கல்லூரி வீதி சங்கத்தானையை வசிப்பிடமாகவும் கொண்ட குமரேசன் விசுவலிங்கம் அவர்கள் நேற்றுமுன்தினம் (20.03.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமரேசன் - சேதுப்பிள்ளை தம்பதியின் அன்பு மகனும், காலஞ்சென்ற சண்முகம் - சரஸ்வதி தம்பதியின் அன்பு மருமகனும், கலாநிதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம், யோகலிங்கம் மற்றும் தவமணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், நாகநந்தினி, நாகரூபன் (லண்டன்), நாகவரதன், மயூரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரதீபன், கஸ்தூரி (லண்டன்), துவாரகா, அபர்ணா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சதாநிதி, தயாநிதி, சுகுணாநிதி, கருணாநிதி (சுவிஸ்), குணசேகரம் (பிரான்ஸ்), சந்திரசேகரம் (லண்டன்), சுகிர்தன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், பிரதிஸ்ரா, சஸ்மிகா, தஸ்வின், ஆராதனா, தியாஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.03.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கல்லூரி வீதி, சங்கத்தானை.

**தகவல் : குடும்பத்தினர்**

077 471 0980, 077 365 5189, 0044 - 795 153 1561

(CS/44633) J-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org